# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW18

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரவிசந்திரன் | Caste | : | |
| S/o. | : | பழனிசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 18.08.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

A1 to A3 present.

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருப்பூர் மாநகரம் சிறப்பு நுண்ணறிவு பிரிவில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 19.05.2018ம் தேதி சங்ககிரி காவல் நிலையத்தில் தலைமை காவலராக இருந்தபோது வட்ட காவல் ஆய்வாளர் அவர்கள் சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.196/2018 இதச பிரிவு 302 வழக்கில் இறந்துபோன சின்னசாமி, த/பெ.அய்யம்பெருமாள் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக காலை 9.00 மணிக்கு என்னிடம் ஒப்படைத்ததை

சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று பிரேதத்தை சவக்கிடங்கில் ஒப்படைத்தேன். மருத்துவர் சிவானந்தம் என்பவரிடம் பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன். பிரேத பரிசோதனை முடிந்த பிறகு பிரேதத்தின் மீதிருந்த உடைமைகளையும் பிரேதத்தையும் உறவினர்களிடம் ஒப்படைத்தேன். மருத்துவர் பிரேத பரிசோதனையின்போது பிரேதத்தில் எடுக்கப்பட்ட உடல் உள் உறுப்புகளை சேலம் மரவனேரியில் உள்ள தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

உடைமைகளையும் பிரேதத்தையும் எந்த உறவினர்களிடம் ஒப்படைத்தேன் என்று ஆய்வாளர் என்னை விசாரித்தபோது நான் கூறவில்லை என்றால் சரி. பிரேதத்தை யார் எத்தனை மணிக்கு எங்கிருந்து என்னிடம் ஒப்படைத்தார்கள் என்று நான் வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரி. நான் சொன்னவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.